

அமரர்

# சிவஸ்ரீ. சிவ. அருணாச்சலக்குருக்கள்



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அருணாச்சல தீபம்

30.07.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
1962.02.25

மறைவு
2020.07.20

அமரர்

# சிவஸ்ரீ. சிவ.அருணாச்சலக்குருக்கள்

அவர்களின் நினைவாக


## திதி நிர்ணயம்

அருணாச்சல குருசாமியவர் ஆயவுடல் நீத்து
பெருமையுடை ஐயப்பன் தாள் – அரியதொரு
சர்வாரியின் ஆடியுடன் கூடும் அமாவாசையே
உள் அறிய உரைத்த திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# ஸ்ரீமதி. பொன்னம்மா சிவபாதசுந்தரக்குருக்கள்



மாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

சிவஸ்ரீ. கந்த. சிவபாதசுந்தரக்குருக்கள்



பிதா, குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பசுவாமி




தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அருணாச்சல தீபம்



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை
வசிப்பிடமாகவும் கொண்ட சீர்தூக்கும் குருத்துவத்தை
திறம்பட ஆற்றி மணிகண்டன் கழல் சேவித்த

**அமரர்**

**ஸ்வர்க்கஸ்ரீ. சிவபாதசுந்தரக்குருக்கள் அருணாசலக்குருக்கள்**

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# நினைவு மலர்

**30.07.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பூவுலக தெய்வத்தின்
## பாதாரவிந்தங்களில் இந்நூல் சமர்ப்பணம்



எமது குடும்பத்தின் ஆணிவேராய்

ஆல்போல் தளைத்து அறுகுபோல்

வேரூன்றி மூங்கில் போல் கிளைபரப்பி

எமை நல்வழி பேணி பார்போற்ற

நன்மக்களாய் வளர்த்து மீளாத்துயரில்

எம்மை விட்டு சிவபதம் அடைந்த

எம் அன்புத் தெய்வத்தின் பொன்னடிகளில்

இந்நினைவு மலரை சமர்பித்து ஆசி

பெறுகின்றோம்

இங்ஙனம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்கட்கிழமையில் பாட உகந்த பஞ்சபுராணம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால் மான்கன்று துள்ளக்கவரி
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே

### திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் :
மெய்யடியார்கள் விரைந்து வம்மின் :
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் : மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்: இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

ஒரு மட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமரரும்பு கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

ஒளிநகை ஊறல் இதழ் மடவாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவினிலிருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரு ஞான குரு உபதேசம்

முத்தமிழின் கலையும் கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ் பதினாறு பிராயமும் வந்து
மதனசொரூபன் இவன் என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர் பிறகோடி
தேடிய மாமுதல் சேர வழங்கி

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திருகண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையில் ஓர் தடியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனும்
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்முறை பேசும் என உரைநாவும்
உறங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே

வளைபிறை போல எயிறும் உரோமம்
முன்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலமறிந்து

வரிசை கெடாமல் எடும் எனஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடமூடி அழல் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுவன்பதி சிறப்புற வாழ்ந்த கந்தசிவபாதசுந்தரக்குருக்களின் வழிகாட்டலின் கீழ் சபரிகிரி ஐயப்பசுவாமியின் வழிபாட்டை அகில இலங்கை ரீதியில் ஸ்தாபித்த முதன்மைக்குரு சபரிகிரி ராஜஸ்ரீ சிவபாத அருணாச்சலக்குருக்களின் வாழ்வின் மறக்கமுடியாத நினைவுகள்

ஈழமணி திருநாட்டின் யாழ்மேவு கட்டுவன் பொற்பதியில் ஆன்றோர் சான்றோர் போற்றி வணங்கும் தலங்கள் மிகு சூழலிலே தவத்திரு கந்தசிவபாதசுந்தரக்குருக்கள் பென்னம்மா தம்பதியினரின் பிள்ளைகளான நீலகண்டக்குருக்கள், ஆறுமுகக்குருக்கள், லலிதாம்பிகை(சாந்தி) வரிசையில் 1962ல் மாசி 25ம் நாள் அருணாச்சலக்குருக்கள் அவதரித்தார். இவர் வளர்ந்து வரும் நாளில் கைலாசநாதக்குருக்கள், இராஜஇராஜேஸ்வரி (மங்களம்), மகேஸ்வரக்குருக்கள் ஆகியோரை இளையவர்களாய் கண்டு வளர்ந்து வந்தார். தனது இளமைக்காலக் கல்வியை கட்டுவன் ஞானோதய மகா வித்தியாலயத்தில் கற்றார். பாடசாலைக் கல்வியுடன் தனது தந்தையாரின் வழிகாட்டலின் கீழ் ஆலய கைங்கர்யங்களையும் சிறப்பாக ஆற்றி வந்தார். ஆலய தொண்டில் கட்டுவன் ஐயப்பன், கட்டுவன் ஐயனார், மயிலிட்டி பிள்ளையார், மயிலிட்டி வைத்தியசாலை முருகன், கொலுவியன் கலட்டி பிள்ளையார், கட்டுவன் சித்தியம்புளியடி வைரவர், காங்கேசன்துறை ஐயனார், ஏழாழை முனியப்பர், கட்டுவன் நாச்சிமார், கோணாவளை ஞானவைரவர், முடமாவடி வைரவர், வண்ணை வீரமாகாளி அம்மன், கல்வியங்காடு பாற்பண்ணை புவனேஸ்வரி அம்மன், கோப்பாய் கண்ணகி அம்மன், சுண்டுக்குழி வைரவர், கோண்டாவில் தில்லையம்பதி அம்மன் ஆலயம், இலுப்பையடி வைரவர் ஆலயம் என பல தலங்களை பொறுப்பேற்று சிறப்புற ஆகம சேவைகளை ஆற்றிவந்தார். மற்றும் குமுழமுனை கற்பக விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவ பிரதமகுருவாகவும் இருந்து சேவைகளை ஆற்றிவந்தார். தனது திருமண வயதை எட்டியதும் 1987ம் ஆண்டு தை 19ம் நாள் திருகோணமலை திரியாயை சேர்ந்த கனகசுந்தரம் மனோன்மணி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான ஸ்ரீமதி கனகமணி அம்மாவை இனிதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்பிடித்தார். தனது இல்வாழ்வின் பயனாக 1989ல் ஐயப்பதாஸனையும் 1990ல் முருகதாஸையும் 1991ல் சிவதாஸையும் பெற்று தன் மூன்று நன்மக்களுடன் சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

காலம் உருண்டோட 1994ம் ஆண்டு தனது தந்தையாரை இழந்தார். தனது தந்தையாரின் விருப்பிற்கும் வழகாட்டலிற்கும் ஏற்பாக கட்டுவன் ஐயப்பசுவாமி தேவஸ்தானத்தை பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தி வந்தார். நாட்டின் சீரற்ற நிலமையால் கட்டுவனிலிருந்து இடம்பெயர்ந்து கல்வியங்காடில் வசித்து வந்தார். 2000ம் ஆண்டு கட்டுவன் சுவாமி ஐயப்பனின் 1வது மஹா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தினார். அதே வருஷ ஐப்பசியில் அவர் தம் தாயாரும் இறைவனடி சேர்ந்தார். காலம் உருண்டோட தன் நன்மக்கள் மூவரும் கல்வியில் சிறப்பாக கற்கவும் பரம்பரை வாரியாக ஆலய கைங்கர்யங்களை ஆற்றவும் சமூகத்தில் நன்மதிப்பை பெறும் வண்ணம் சிறந்த வழிகாட்டியாயிருந்து வளர்த்தார். 2015ம் ஆண்டு கட்டுவன் ஐயப்பசுவாமியின் 2வது மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தி வைத்தார். ஐயனை நாடிவருகின்ற அடியார்களிற்கு மகேஸ்வர பூசை செய்வதற்காக அன்னதான மடத்தை ஸ்தாபித்து அங்கு அன்னதானம் மட்டுமல்லாமல் பிற் காலங்களில் வேதாகம வகுப்புக்களையும் நடாத்தி வித்தார். 2018ல் தனது மூத்தமகன் ஐயப்பதாஸனுக்கு பருத்தித்துறை தம்பசிட்டியை சேர்ந்த சிவத்திரு பிரபாகரன் ஐயா சந்திரவதனி தம்பதியரின் ஏகபுதல்வி சதுர்த்திகாவை திருமணம் செய்து வைத்து அனுஸ்ரீகா எனும் பெண்குழந்தையை பேத்தியாக கண்டு அகமகிழ்தார். மிகுந்த பாசத்துடன் பேரக்குழந்தையை லக்ஷ்மி என்றே அழைத்து அன்பு பாராட்டினார் சைவநெறி தவறாது நேர்மை, உண்மை, பொதுநலன் என வாழ்ந்துகாட்டி, அறம்பேணி நன்நாளாம் ஆடிஅமாவாசை நாளிலே இறைவனடி சேர்ந்தார்.

~சுபம்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் கொடுத்த விருட்சம் வீழ்ந்தது

யாழ்ப்பாணத்தில் உள்ள தென்மயிலிப்பதியில் திரு.க. சிவபாதசுந்தரக்குருக்களுக்கும் பொன்னம்மா அம்மையாருக்கும் நான்காவது பிள்ளையாக 1962ம் ஆண்டு மாசித்திங்கள் 2ம் நாள் அவதரித்தார். இவர் பாடசாலைக் கல்வியை கற்கும் வயதிலேயே தந்தையாருடனும் அண்ணன்மாருடனும் எங்கள் மயிலிட்டி வடக்கிலுள்ள கொழுவியன் கலட்டி பிள்ளையார் ஆலயத்திற்கு வருவது வழமையாகி விட்டது. இவரைக் காணும் போதெல்லாம் நாங்கள் "குட்டி ஐயா" என்று செல்லாமாக அழைப்போம்.

இவர் மோதகப்பிரியன் பிள்ளையாரின் கருணையால் அவருக்கு பூசகராக தந்தையாரால் ஏற்பாடு செய்யப்பட்டது. வயதில் சிறியவராக இருந்தாலும் முதியோர் தொடக்கம் சிறியோர் வரை எல்லோரிடத்திலும் அன்பு காட்டி இருந்தார். தந்தையாரதும் இவரதும் வழிகாட்டலால் மக்கள் ஒன்று சேர்ந்து பெருமானுக்கு கொடிமரம் நாட்டி கொடியேற்றத் திருவிழா செய்ய ஆரம்பித்தார்கள். அத்துடன் மேலும் இவர்களின் வழிகாட்டலுடன் பெருமாளின் கருணையுடன் சித்திரத் தேரும் சிறப்புறச்செய்து இரதோற்சவமும் செய்தார்கள். இவர்கள் செல்லும் இடங்கள் எல்லாம் ஆலயங்களும் விருட்சம் போல் வளர்ச்சி அடைந்தன. அத்துடன் ஆலயத்திற்கு வருபவர்களுக்கெல்லாம் பிரசாதம் வழங்கி மகிழ்விப்பார்.

ஆலய உற்சவ காலங்களில் சாமிக்கு வாசன் நீராட்டுவதில் முதன்மையாக இருப்பார் . இப்படி எல்லாம் எங்கள் ஆலயம் இருந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக மக்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து பல கோவில்களிலும் சென்றிருந்தோம்.

மேற்படி இடம் பெயர்ந்த நிலையில் தான் ஐயா தனது தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட கட்டுவன்பதி கரண்டைக்குளம் ஐயப்ப சுவாமி அபிசேகம் செய்து பூசைகளையும் ஆரம்பித்தார். ஐயப்ப சுவாமிக்கு முன் மண்டபம், அன்னதானமடம், தீர்த்த தடாகம் அமைத்து கொடியேற்றம் என எல்லா உற்சவங்களையும் செய்து சிறப்புற செய்து இருக்கையில் சலரோகம் எனும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு இறைவனடி சேர்ந்தார். இப்படியாக தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாழ்கையையே ஆலய வளர்ச்சிக்கு என வாழ்பவர்கள் யாரும் இல்லை. வருபவர்களுக்கும், வராதோரையும் அழைத்து அன்னமிட்ட அந்த பெரும் விருட்சம் வீழ்ந்து விட்டது. தீபம் அணைந்து விட்டது. அமைதி அடைந்து விட்டது. ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாராது குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

மயிலிட்டி வடக்கு கொழுவியன் கலட்டி பிள்ளையார் மக்கள்
சார்பாக சி.நடராசா குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தங்க. முகுந்தன்

குருஸ்வாமி

சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக் குழு

தொலைபேசி இல: 0094 777278238

# என்றும் மறக்க முடியாத அருணாசலக்குருக்கள் ஐயா!

கட்டுவன் ஐயப்பன் கோவில் குருக்கள் ஐயாவை என் உயிருள்ளவரை மறக்க முடியாது! உயர்தர வகுப்பில் படிக்கும் போது குரும்பசிட்டியில் இருந்து தெல்லிப்பழை போகும் போது கோவில் வீதி வழியாக செல்லும் போது ஐயனாரையும் ஆலமரத்தையும் சுற்றி வருவது வழக்கம். 1999 களின் பின் யாழ்ப்பாணத்திற்கு வரும் போது ஐயப்ப விரதம் இருந்த வேளை ஆறுமுகக்குருக்கள் ஐயாவுடன் ஒரு தடவை காடுமண்டிக்கிடந்த ஐயப்பன் கோவிலுக்கு சென்றது ஞாபகம்.

2011ன் பின் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிறகு அருணாசலக் குருக்கள், ஐயா குடும்பத்துடன் தொடர்புகள் ஏற்பட்டது. எங்கள் ஊரில் ஐயனார் கோவிலில் நடந்த ஐயப்பன் பூஜைக்கு குருக்கள் ஐயாவும், ஐயப்பா ஐயாவும் வந்து சிறப்பித்ததும், கொழும்பிலிருந்து ரவிகுருஸ்வாமி கணாஸ்வாமி வீட்டுப்பூஜையில் குடும்பமாக வந்து கலந்து சிறப்பித்ததையும் மறக்க முடியாது. ஐயப்பன் கோவிலில் நாங்கள் நினைத்தபடி அஷ்டாபிஷேகமும் படிப்பூஜைகளும் நடத்த அனுமதி தந்து எங்கள் கோவில் என உரிமை கொண்டாட அவரது தாராள மனம் அனுமதித்ததை என்றும் நன்றியோடு நினைவு கூற வேண்டிய கடமை எனக்குண்டு.

சாமி அல்லது அண்ணை என அன்போடு கூப்பிடும் ஐயாவிற்கு என்னை விட மூன்று வயது அதிகம். நான் ஏன் என்னை ஐயா அண்ணை என கூப்பிடுகிறீர்கள் என கேட்டபோது சிரித்துக் கொண்டே அப்படிக் கூப்பிட்டால் குறையொன்றும் இல்லையே எனச் சொல்லுவார். வெளியூர்களில் இருந்து வரும் ஐயப்ப பக்தர்களுக்கு தங்க மடத்தில் இடமும் மூன்று நேரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண உணவும் அளித்தவர். எந்த விதமான பிரதி பலனையும் எதிர்பாராமல் வருவோருக்கு தமிழரின் பண்பாடாம் விருந்தோம்பலை குடும்பத்துடன் கட்டிக்காத்த பெருமைக்குரியவர். சூரிய சந்திரர் உள்ளவரை எங்கள் குருஸ்வாமியின் தருமப் பணிகள் நிலைத்து நிற்கும் என்று கூறி நிறைவு செய்கின்றேன். ஐயாவின் ஆத்மா எல்லாம் வல்ல சபரிகிரி ஸ்ரீ ஐயப்பன் பாதார விந்தங்களில் நிலையாக இருக்கப் பிரார்த்திப்போமாக!

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அன்புடன் என்றும் நன்றியுள்ள,

தங்க. முகுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம சாஸ்த்திரச் சுருக்கம்
# ஆசௌச காண்டம்

## 1.0 ஞாதிகள்

ஞாதிகள் என்பது இரு வகைப்படும் .

1. முதலாவது ஸபிண்டர்கள் - அதாவது பத்துநாள் தாயாதர்கள்.
2. வது ஸமானோதகர்கள் - அதாவது 3 நாள் தாயாதர்கள்.

அவர்களுள் ஸபிண்டர்கள் என்பது கூடஸ்தனிலிருந்து ஏழு தலைமுறை வரையில் உள்ளவர்கள். ஸமானோதகர்கள் என்பது எட்டாவது தலைமுறை முதல் 14 தலைமுறை வரையில் உள்ளவர்கள்.

ஒருவனுக்கு பிதா, பிதாமஹுன், ப்ரபிதாமஹுன், புத்ரன், பௌத்ரன், ப்ரபௌத்ரன் இவனுட்பட ஏழு தலைமுறை (ஆகும்)

தகப்பன் பிள்ளைகளும், அண்ணன் தம்பிகளும் தாயாதர்களே.

## 2.0 பிறப்புத் தீட்டு

- நாலாவது மாஸத்தில் கர்பத்தின் விச்சித்தி (சிதைவு) உண்டானால் பிதாவுக்கு ஸ்நானம், மாதாவுக்கு 4-நாள் தீட்டு.
- 5-6வது மாசங்களில் விச்சித்தி உண்டானால் பிதாவுக்கும் ஸபிண்டர்களுக்கும் ஸநானம் . பிண்டம்போல் விழுந்தால் இவர்களுக்கு 3 நாள் தீட்டு . தாய்க்கு 5-வது மாசத்திலானால் 5 நாளும் , 6-வது மாசத்திலானால் 6 நாளும் தீட்டு.
- 7-வது மாசம் முதல் பிறந்தது பிள்ளையானால் மாதா பிதாக்களுக்கும், ஸபிண்டர்களுக்கும் பத்துநாள் தீட்டு. (எட்டாம் தலைமுறை) ஸமானோதகர்களுக்கு 3-நாள் தீட்டு.
- ஆண் குழந்தையானால் 30 தினங்களுக்குப் பிறகும், பெண் குழந்தையானால் 40 தினங்களுக்குப் பிறகும் மாதா (குழந்தை பெற்றவள்) வுக்கு பாண்ட ஸ்பர்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சமையல் பாத்திரங்களைத் தொட) யோக்யதை உண்டாகும்.

❖ பெண் குழந்தை பிறந்தால் அதன் பின்னோதரன் உட்பட சகோதரன், தகப்பன், பின்னோதரன் உள்பட சிறிய தகப்பன், பெரிய தகப்பன், பின்னோதரன் அல்லாத சிறிய தகப்பன், பெரிய தகப்பன் பிள்ளைகள், பிதாமஹன், அந்தப் பிதாமஹனுடைய பின்னோதரன் உள்பட சகோதரர்கள் இவர்களுக்குப் பத்துநாள் தீட்டு.

❖ (பெண் குழந்தை பிறந்தால்) பின்னோதரன், சிறிய தகப்பன், பெரிய தகப்பன் பிள்ளைகளுக்காவது, பிதாமஹனுடைய சகோதரர்களின் பிள்ளைகளுக்காவது, சிசு (குழந்தை) வின் சகோரதரனுடைய பிள்ளைகளுக்காவது தீட்டில்லை.

❖ பெண்கள், தாய் தகப்பன் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களுடைய பொருள் செலவினால் வேறு இடத்தில் (மருத்துவ மனைகளில்) ப்ரஸவித்தாலும், (பெண்ணின்) தாய் தகப்பன்களுக்கு 3 நாள் தீட்டு.

❖ ஒரு பெண் தன் சகோதரன், சிறிய தகப்பன், பெரிய தகப்பன், அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களின் பொருள் செலவினால் வேறு எந்தவிடங்களில் ப்ரஸவித்தாலும், (மேற்சொன்னவர்களுக்கு) 1 நாள் தீட்டு .

❖ உபநயனம் இல்லாதவனுக்கும் (ஆகாதவனுக்கும்), ப்ரஹ்மசாரிக்கும் தீட்டில்லை.

❖ பிறப்புத் தீட்டில் அதிக்ராந்த ஆசௌசம் (தீட்டு முடிந்த பிறகு கேள்விப்பட்டால் அதன் பிறகு தீட்டு காக்கவேண்டிய அவசியம்) இல்லை. ஆனால் பிதாவுக்கு (குழந்தையின் தந்தை) மட்டில் ஸ்நானம் உண்டு.

❖ ஜனனத்தில் பிதாவுக்கு 2 நாழிகை சுத்தி. பிதா வெகு தூரத்தில் இருந்தால் ஒரு நாள் சுத்தி (சுத்தம்). அல்ப தூரத்தில் இருந்தால் ஒரு பகல் சுத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 இறப்புத் தீட்டு

### 3.1 10-நாள் தீட்டு

- தசராத்ர ஜ்ஞாதிகளின் மரணத்தில் 10 நாள் தீட்டு .
- பிறந்து பத்துநாள்களுக்கு மேல், புருஷ சிசுவின் (ஆண் குழந்தையின்) மரணத்திலும், விவாஹம் வரையில் பெண் குழந்தையின் மரணத்திலும், தாய், தந்தை, பின்னோதர ப்ராதா, சகோதர ப்ராதா இவர்களுக்கு 10 நாள் தீட்டு.
- 7 வயதிற்குட்பட்டு உபநயனமான தசராத்ர ஜ்ஞாதிகளின் பிள்ளைகள் இறந்தால் 10 நாள் தீட்டு.
- 7 வயது முதல் உபநயனமானாலும் ஆகாமலிருந்தாலும் புருஷப்ரஜை (ஆண்) மரணத்தில் 10 நாள் தீட்டு.

### 3.2 புருஷர்களுக்கு 3 நாள் தீட்டு .

- மாதாமஹன், மாதாமஹீ
- அம்மான், அம்மாமி
- மாமனார், மாமியார்
- தாயின் சகோதரி
- தகப்பனின் சகோதரி
- உபநயனமான மருமான்
- உபநயனமான தௌஹித்ரன்
- உபநயனமான ஸமானோதகன்
- விவாஹமான பெண்
- சகோதரி
- ஜனகமாதா (ஸ்வீகாரம் போனவனுக்கு)
- ஜனகபிதா (ஸ்வீகாரம் போனவனுக்கு)
- தத்தனான (ஸ்வீகாரம் வழங்கப்பட்ட) பிள்ளை
- 25-வது மாஸம் முதல் 6 வருஷம் முடிய அநுபநீதனான தசராத்ர ஜ்ஞாதிகளின் பிள்ளை
- 24 மாஸங்களுக்கு மேற்பட்டு சௌளமாகிவிட்ட ஜ்ஞாதிகளின் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 7 -வது வருஷம் முதல் விவாஹம் வரையில் தசராத்ர ஜ்ஞாதிகளின் பெண். (பெண் குழந்தை விஷயத்தில் 3 - தலைமுறை வரையில் தான் ஸபிண்ட்யம் என்பதை கவனிக்கவும்)
- ஸமானோதகர்களுக்கு –
    1) ஏழு வயதிற்குட்பட்டு உபநயனமான ஜ்ஞாதிகளின் பிள்ளை.
    2) ஏழு வயது முதல் உபநயனமானாலும் ஆகாவிட்டாலும் ஜ்ஞாதிகளின் பிள்ளை.

(மேற்சொன்ன அனைத்து உறவினர் மரணத்திலும் 3 நாள் தீட்டு)

### 3.3 புருஷர்களுக்குப் பக்ஷிணித் தீட்டு

குறிப்பு :- பக்ஷிணி என்பது, இரண்டு இரவும் ஒரு பகலும், அல்லது ஒரு இரவும் இரண்டு பகலும் கொண்ட காலம்.

1. அத்தையின் பிள்ளைகளும், பெண்களும்.
2. அம்மானுடைய (மாமா) பிள்ளைகளும், பெண்களும்.
3. தாயின் சகோதரியின் பிள்ளைகளும், பெண்களும்.
4. சகோதரிகளின் பெண். (சகோதரியின் பிள்ளை 3 நாள் தீட்டில் வருவதைக் கவனிக்கவும்)
5. சகோதரனுடைய கல்யாணமான பெண்
6. பித்ருவ்யனுடைய (அப்பாவின் சகோதரர்கள்) பெண்.
7. பௌத்ரீ (பிள்ளையின் பெண்)
8. தௌஹித்ரீ (பெண்ணின் பெண்)
9. 3 வயதுக்கு மேற்பட்ட உபநயனமாகாத மருமான், தௌஹித்ரன். (மருமான் -சகோதரியின் பிள்ளை. தௌஹித்ரன் -பெண்ணின் பிள்ளை)

மேற்கண்டவர்களின் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம் (தீட்டு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.4 பெண்களுக்குப் பக்ஷிணித் தீட்டு

1. தந்தையுடன் பிறந்த சிற்றப்பன், பெரியப்பன்
2. தாயுடன் பிறந்த சித்தி, பெரியம்மா
3. மாமன்,
4. அத்தை
5. மேற்கூறிய நால்வருடைய பெண்களும், பிள்ளைகளும்
6. தந்தையின் தந்தை - பிதாமஹன்
7. தந்தையின் தாய் - பிதாமஹி
8. தாயின் தந்தை - மாதாமஹன்
9. தாயின் தாய் - மாதாமஹீ
10. சகோதரி, சகோதரியின் பெண்
11. மருமான்

மேற்கண்டவர்களின் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம் (தீட்டு).

குறிப்பு :- சூர்ய உதயம் முதல் சூர்ய உதயம் வரை ஒரு நாளாகக் கணக்குச் செய்பவர்கள் இரவில் எப்போது இறந்தாலும், இதை ஒரு காலமாக (ஒரு இரவாக) வைத்துக் கொள்ள வேண்டியது. ஆனால் ராத்திரி 18 $^{3}/_{4}$ நாழிகைக்கு மேல் (அதாவது சூரிய அஸ்தமன நேரத்திலருந்து 7½ மணி நேரம் - சுமார் நள்ளிரவு 1.30 மணிக்குப் பிறகு) நேரிடுவது மறுநாளில் சேர்த்துக் கணக்குச் செய்பவர்கள் (இதுவே தமிழக வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்) மறு நாள் (பகல்) கணக்கில் சேர்த்துக் கொண்டு கணக்கிட வேண்டியது.

குறிப்பு :- பெண்கள் மாதவிலக்கு ஆகும் நாள் கணக்கிற்கும், மரணமானவர்களுக்கு 10ம் நாள் கணக்கிடுவதற்கும் இந்த 2ம் முறையே பின்பற்றப்படுகிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 புருஷர்களுக்கு 1-நாள் தீட்டு

**குறிப்பு** :- ஸமானோதர - என்பது ஒரு வயிற்றில் பிறந்த சகோதரர்களை குறிக்கும். பின்னோதரன் என்பது சிறிய - பெரிய தகப்பன் பிள்ளைகளைக் குறிக்கும்

1. ஸபத்நீ மாதாவின் (மறு தார அம்மா) சகோதரன், சகோதரி, பெண்
2. மேற்கண்ட மூவரின் பெண், பிள்ளை
3. மைத்துனன் (மனைவியின் சகோதரன்).
4. பின்னோதரர்களான சிறிய தகப்பன், பெரிய தகப்பன், இவர்களின் பெண்.
5. பின்னோதரப்ராதாவின் பெண் . பின்னோதர அத்தை.
6. மேற்படியாளுடைய (அத்தையுடைய) பெண், பிள்ளை.
7. ஸபத்னீமாதா (வேறு அம்மா) வின் தகப்பனார், தாயார் .
8. 25-வது மாதம் முதல் 6-வது வருடம் வரையில் விவாஹமாகாத ஜ்ஞாதியின் பெண்.
9. ஜநக ப்ராதா (ஸ்வீகாரம் சென்றவனுக்கு பிறந்தவீட்டுச் சகோதரன்).
10. ஜநக ஸபிண்டன் (பிறந்த வீட்டைச் சேர்ந்த ஏழு தலைமுறைக்குட்பட்ட ஜ்ஞாதி).
11. பத்னீ, அவள் சந்ததி இரண்டுமில்லாத விஷயத்தில் மாமனார், மாமியார். (அதாவது குழந்தையில்லாமல் இறந்துபோன மனைவியின் தந்தை, தாய்) .
12. 6-மாஸத்திற்கு மேல் 24 மாஸத்திற்குட்பட்ட சௌளமாகாத ஜ்ஞாதியின் பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.0 ஸ்த்ரீகளுக்கு கணவனுடன் ஏற்படும் தீட்டைத் தவிர தனியாக ஏற்படும் தீட்டுகள்.**

கணவனுக்குண்டான தீட்டு அதே அளவு மனைவிக்கு உண்டு. மனைவிக்கு மட்டுமான தீட்டு கணவனுக்கு இல்லை.

**5.1 ஸ்த்ரீகளுக்கு மட்டுமான 3 நாள் தீட்டுகள்.**

1. உபநயனமான சகோதரன் . (4.3 இன் படி கணவனுக்கு 1 நாள் தீட்டு)
2. உபநயனமான மருமான்
3. உபநயனமான சகோதரியின் பிள்ளை .
4. ஐபத்னீ மாதா அல்லது தனது தாயாரின் இளையாள், அல்லது மூத்தாள் ஆகிய இவர்கள் இறந்தால் 3 நாட்கள் பெண்களுக்கு தனியாக தீட்டு உண்டு.

**5.2 ஸ்த்ரீகளுக்கு புண்யாசௌசம் (90 நாழிகை தீட்டு)**

1. பித்ருவ்யன் (அப்பாவின் சகோதரர்)
2. தாயின் சகோதரி
3. மாதுலன் (தாயின் சகோதரன்)
4. அத்தை
5. மேற்சொன்ன நால்வருடைய பிள்ளை அல்லது பெண்
6. பிதாமஹன் (அப்பாவின் அப்பா)
7. பிதாமஹி (அப்பாவின் அம்மா)
8. மாதாமஹன் (அம்மாவின் அப்பா)
9. மாதாமஹி (அம்மாவின் அம்மா)
10. சகோதரி
11. சகோதரியின் பெண்
12. மருமாள்

இவர்களின் மரணத்தில் பெண்களுக்கு மட்டும் 90 நாழிகை தீட்டு. அகவிவேசனக்காரர், ஸபத்னீ மாதவின் மரணத்தில் ஸபத்னியினுடைய பெண்ணிற்கு 1 நாளும், ஸபத்னியினுடைய பெண் மரணத்தில் ஸபத்னிக்கு ஒரு நாளும் தீட்டு என சொல்லியிருக்கிறார். அது பிசகு எனில், ஸபத்னியினுடைய பெண் இறந்தால் அந்தப் பெண்ணினுடைய தகப்பனாராகிய தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்தாவுக்கு 3-நாள் தீட்டு இருக்க, இவளுக்கு மட்டில் ஒரு நாள் தீட்டு சொல்லக் காரணமில்லை. அகபஞ்சஷஷ்டிக்காரர் இவ்விஷயத்தில் 3 நாள் தீட்டுச் சொல்லியிருக்கிறார். இத்யாதி காரணங்களைக் கொண்டு 3- நாள் தீட்டு என்பதுதான் ஸித்தாந்தம்.

குறிப்பு :- வரிசை எண் அமைப்பு மற்றும் அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை படிப்பவரின் புரிந்து கொள்ளுதலுக்காக கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மூல புத்தகத்தில் இல்லை. வழக்கத்தில் உள்ள வைதீக கர்மாக்களுக்கு மட்டுமே அடியேனால் மேற்கொண்டு விளக்கம் அளிக்க முடியும். இது ஏன் இப்படிக் கொடுக்கப்பட்டுள்ளது ஏன் இப்படி இருக்கக்கூடாது என்பது போன்ற குதர்க்கமான கேள்விகளுக்கு பதில் அளிக்க இயலாது.

**5.3 ஸ்த்ரீகளுக்கு மட்டும் 1 - நாள் தீட்டு.**

1. ஸபத்னீமாதாவின் (-தாயின் மூத்தாள் அல்லது இளையாள்) புத்ரன், புத்ரீ, சகோதரி, சகோதரன்.
2. மேற்சொன்ன நால்வரின் பெண்கள் பிள்ளைகள்.
3. பின்னோதர பித்ருவ்யன், பின்னோதர அத்தை.
4. மேற்படி இருவர்களுடைய பெண்கள், பிள்ளைகள்
5. ஸபத்னீ மாதாவின் தாய், தகப்பன்.

இவர்கள் மரணத்தில் ஸ்த்ரீகளுக்கு ஒரு நாள் ஆசௌசம்.

குறிப்பு :- இறப்புத் தீட்டுச் சொன்னவர்களில் பிள்ளைகள் பெண்கள் என்று சொல்லியிருப்பதில், பிள்ளைகள் உபநயனமானவர்கள், பெண்கள் கல்யாணம் ஆனவர்கள் என்று அறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 தீட்டுச் சேர்க்கை.

### 6.1 பிறப்புத் தீட்டில் பிறப்புத் தீட்டு.

1. 3 நாள் தீட்டில் மற்றொரு 3 நாள் தீட்டு வந்தால் அது முன்வந்த தீட்டோடு (அந்த தீட்டு முடியும் தினத்தோடு இந்த தீட்டும்) போய்விடும்.
2. 10-நாள் தீட்டில் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால் அதேபோல் முன்வந்த தீட்டு முடியும் தினத்திலேயே (10 வதுநாள் வந்தாலும்) பின் வந்த தீட்டும் முடிந்துவிடும்.
3. 3 நாள் தீட்டின் மத்தியில் 10 நாள் தீட்டு வந்தாலும், 10 நாள் தீட்டின் மத்தியில் 3 நாள் தீட்டு வந்தாலும் 10 நாள் தீட்டின் முடிவில்தான் தீட்டுப்போகும்.
4. ஒரு தீட்டின் நடுவில் ஒரு குழந்தை பிறந்தால், அதன், தாய், தகப்பன் இவர்களுக்கு மட்டில் பிறந்தது முதல் 10 நாள் தீட்டு உண்டு.
5. 10 நாள் தீட்டின் 10 வது நாள் ராத்திரியில் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால், பிறகு 2 நாளும், 10 வது நாள் ராத்திரி முடியும் தருவாயில் அருணோதயத்தில் வந்தால் பிறகு 3 நாள் அதிகத் தீட்டு உண்டு.
6. 10 நாள் தீட்டின் மத்தியில் 3 நாள் தீட்டு எப்போது வந்தாலும், அதற்காக விசேஷ மொன்றும் இல்லை.
7. ஒருவன் தனக்கு சிசு பிறந்து தீட்டுக்காத்துக் கொண்டிருக்கும் போது 10 வது நாள் ராத்திரியில் எப்போதானாலும் வேறு பிறப்புத் தீட்டு வந்தால் அதிகத் தீட்டில்லை.
8. ஒரு தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது, அத்தீட்டின் ஆரம்ப நாளுக்கு (சில தினங்கள் முன்னமே) ஏற்பட்ட ஒரு தீட்டு பின்னதாகத் (தாமதமாகத்) தெரியவந்தாலும் முன்னால் ஏற்பட்ட தீட்டின் முடிவோடு தற்போது காத்துக் கொண்டிருக்கும் தீட்டும் போய்விடும். அதாவது நடந்த ஸம்பவத்திற்கு முக்கியத்துவமே அன்றி, கேள்விப்பட்ட நாளுக்கு அல்ல.
9. ஒருவனுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்ததில் ஒன்று முதல் நாளும், மற்றொன்று மறு நாளுமாக பிறக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயத்தில் (முன் வந்த தீட்டோடு பின் வந்த தீட்டு போய்விடும் என்ற ந்யாயத்தினால்) முதலில் பிறந்த குழந்தையின் காலத்தை ஒட்டி தீட்டு நிவர்த்தி, (க்ஷவரம் செய்து கொள்ளுதலை) அநுஷ்டிக்கவேண்டும். ஆனால் தாயருக்கு மட்டில் பின்னாடிப் பிறந்த குழந்தைக்கு 11 வது நாளின் முடிவில்தான் தீட்டுப்போகும்.

### 6.2 பிறப்புத் தீட்டும், இறப்புத் தீட்டும்.

1. பிறப்புத் தீட்டைக் காட்டிலும் இறப்புத் தீட்டு பலமானது. இறப்புத் தீட்டுடன் பிறப்புத் தீட்டு போய்விடும். பிறப்புத் தீட்டுடன் இறப்புத் தீட்டு போகாது.
2. ஆனால், ஒருவன் தனக்கு குழந்தை பிறந்து தீட்டுக் காத்துக் கொண்டிருக்கும்போது ஜ்ஞாதி (பங்காளி) மரணம் ஏற்பட்டால் அது பிறப்புத் தீட்டோடு போய்விடும்.
3. தாய், தகப்பன், தங்களுக்கு சிசு பிறந்து தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது அந்த சிசுவானது இறந்தால் இறப்புத் தீட்டு அதிகமில்லை. 10 வது நாளில் இறந்தால் 2 நாளும், 11 மந் நாள் விடிவதற்கு முன் இறந்தால் 3 நாளும் அதிகத் தீட்டு உண்டு. மற்றவர்களுக்கு அதிகத் தீட்டு கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில பொதுவானவை

- தீட்டு ஒருவனுக்கு உண்டு என்று தெரிந்து ஒருவன் (தீட்டிலாதவன்) தீட்டுடையவனுடைய வீட்டில் சாப்பிட்டால், உண்டவன் அன்று பூராவும் தீட்டைக் காக்க வேண்டும். மறுநாள் தான் தீட்டுப் போகும்.
- தீட்டு போகும் நாளில் (ஸங்கவ காலம்) வந்த பின்பே சுமார் எட்டரை மணிக்கு மேல் தான் ஸ்நானம் செய்ய வேண்டியது.
- பிறப்பு, இறப்பு, மாதவிடாய் இவைகள் சூரியோதயத்திற்கு 11½ நாழிகைக்கு முன் ஏற்பட்டால் முதல் நாள் முதல் கணக்கு. பிறகு ஏற்பட்டால் மறு நாள் முதல் கணக்கு. அருணோதயம் முதல் கணக்கிடுபவர்களும் சிலர் உண்டு.
- பிரேதத்தின் பின் போனாலும் க்ஷவரம் செய்து கொண்டாலும் இருமுறை ஸ்நானம் செய்ய வேண்டியது.
- ஸந்யாஸிகள் தங்கள் முன் ஆஸ்ரம மாதா பிதாக்கள் இறந்ததாகக் கேட்டால் உடனே ஸாது ஸ்நானம் செய்ய வேண்டியது. மற்றவர்கள் எவராயினும் ஸ்நானம் இல்லை,
- வேறு விதி (எண்பத்தெட்டு அடிக்குள் பிணம் இருந்தால் ஹோமம் சமையல் சாப்பாடு உண்பது முதலியன கூடாது.
- ஸந்யாஸி இறந்து அவர் உடலிருந்தால் கிராமத்திற்குத்தீட்டுக் கிடையாது.
- நான்காவது வர்ணத்தாரின் சவம் ஊருக்குள்ளே இருந்தால், அது இருக்கும் இல்லத்திற்கு மட்டும் தான் தோஷமுண்டு.
- நானூறு அந்தணர்கள் உள்ள ஊரில் 11 வில்கடை தூரத்தில் ஒரு பிராம்மணர் இறந்தால் தீட்டில்லை. அவ்வளவு தூரம் இல்லாவிட்டால்ம் ஒரு வாய்க்கால் மதகுகளால் பிரிக்கப்பட்டு வேறு விதியில் இருந்தாலும் தோஷமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல்

## மனித உடல் பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| மனித கலத்தின் நிற மூர்த்தங்கள் | - 23 சோடி |
| எலும்புகளின் எண்ணிக்கை | - 206 |
| விலா எலும்புகளின் எண்ணிக்கை | - 24 |
| நரம்புகளின் மொத்த எண்ணிக்கை | - 72000 |
| மூட்டுக்களின் எண்ணிக்கை | - 230 |
| தசைகளின் எண்ணிக்கை | - 639 |
| உடலின் சராசரி வெப்பநிலை | - 36.8°c / 98.4°F |
| சராசரி நாடித் துடிப்பு | -நிமிடத்திற்கு72தடவைகள் |
| மிகப் பெரிய சுரப்பி | - ஈரல் |
| மிகச் சிறிய சுரப்பி | - தைரொய்ட் |
| மிகப் பெரிய அங்கம் | - தோல் |
| மிகப் பெரிய உறுப்பு | - கல்லீரல் |
| மிக நீண்ட எலும்பு | - தொடை எலும்பு |
| மிக வன்மையான பகுதி | - பல்மிளிரி |
| உயிரற்ற கலங்களால் ஆன பகுதி | - மயிர், நகம் |
| முதலில் இறக்கும் பகுதி | - மூளையின் கலங்கள் |
| குருதியின் சிவப்பு நிறத்துக்கு காரணம் | - ஈமோகுளோபின் |
| தலைமுடியின் கறுப்பு நிறத்துக்கு காரணம் | - மெலனின் |

## விற்றமின்கள் குறைவால் ஏற்படும் நோய்கள்

- A - கண் நோய்
- B1 - நரம்புத்தளர்ச்சி, பெரிபெரி நோய்
- B2 - வாய்ப்புண், கண் சிவப்பு
- B3 - கண் பார்வைக் குறைபாடு
- C - பல் நோய்
- D - எலும்புருக்கி நோய்
- E - ஆண்மைக் குறைவு, குறைப் பிரசவம்
- K - இரத்தப் போக்கு, அனிமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே!
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே!
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே!
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே!
பொருளைத் தேடு ஆனால் பேராசைப் படாதே!
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே!

## வாழ்க்கையைக் கற்றுக் கொள்வோம்!

01. அன்புடன் இரு; உனக்குள் அது இருக்கிறதா? என ஆழ்ந்து தேடிப் பின்பற்று.
02. கல்வி என்னும் வேரில் இருந்தே ஒழுக்கம் என்னும் கனி கிடைக்கும்.
03. பாதை தவறி இருளில் செல்லும் மனிதனை நேர்வழிப்படுத்தும் ஒளி அன்பு மட்டுமே!
04. கெட்டவர்களின் சேர்க்கை பகுத்தறிவை அழிப்பதில் முன்னோடியாய் இருக்கிறது.
05. ஒரு தேசத்தின் பெருமை அந்த தேச மக்களின் ஒழுக்கத்தைப் பொறுத்தே அமைகிறது.
06. அமைதி என்பது உனக்குள் இருந்தே ஊற்றாய் சுரக்க வேண்டும்.
07. அறிவின் உச்சக்கட்டமே அன்பு; கல்வியின் உச்சநிலை நல்ல குணாதிசயமாகும்.
08. எந்தச் செயலையும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே செயல் படுத்துங்கள்
09. அதிக உணவு மந்த புத்தியையே தரும். ஆகவே உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவில்கிறோம்

எம்மை அன்பாய் ஆதரவாய் அறநெறி தவறாது வழிநடத்தி வாழவைத்த அன்புத் தெய்வம்

**அமரர் ஸ்வர்க்கஸ்ரீ சிவபாத அருணாச்சலக்குருக்கள்**

எங்கள் தந்தையின் சிவபதப்பேறு குறித்த செய்தி அறிந்து ஓடிவந்து ஆறுதல் கூறியவர்கள். தொலைபேசி, முகநூல், பத்திரிகை மூலம் துயரில் பங்குகொண்டவர்கள், இறுதிக்கிரிகையை சிறப்பாக நடாத்திய குருமார்கள், இறுதி யாத்திரையில் கலந்துகொண்டவர்கள், அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளில் கலந்துகொண்டவர்கள், ஆன்ம ஈடேற்ற வழிபாட்டில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்துவிதத்திலும் உதவியாய் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஆலய சமூகத்தவர்கள் அனைவருக்கும் மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

புலவனார் வீதி
கல்வியங்காடு.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றவர்களுடையதாகின்றது
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகும்



**இதுவே உலக நியதியும்,**
**எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 0212219129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org